# 20 & 21 ஆகஸ்ட் 2021 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## முக்கிய தினங்கள்

### ஆகஸ்ட் 20 –சத்பவ்னா திவாஸ்




- இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தியின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 20 ஆம் தேதி சத்பவனா திவாஸ் கொண்டாடப்படுகிறது.
- 1984 முதல் 1989 வரை பணியாற்றிய இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்தநாளை நினைவுகூரும் நாள்.
- 1992 ஆம் ஆண்டில், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவாக இந்திய தேசிய காங்கிரஸின் அகில இந்திய நாடாளுமன்ற ஆணையத்தால் ராஜீவ் காந்தி தேசிய சத்பவனா விருது நிறுவப்பட்டது.
- சமூகத்தின் நல்லிணக்கத்தைப் புரிந்துகொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படுகிறது.

### அக்ஷய் உர்ஜா திவாஸ்




- அக்ஷய் உர்ஜா திவாஸ் என்பது இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் வளர்ச்சிகள் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரமாகும், இது 2004 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 20 அன்று கொண்டாடப்படுகிறது.
- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களுக்கான இந்திய அமைச்சகம் 2004ல் அக்ஷய் உர்ஜா தினத்தை (திவாஸ்) தொடங்கியது.
- முதல் விழா 2004 மற்றும் 2005ல் புது தில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டது, அதைத் தொடர்ந்து 2006 இல் நாக்பூரில் மற்றும் 2007 இல் ஹைதராபாத் மற்றும் 2008 இல் ஹரியானாவின் பஞ்ச்குலாவில் மீண்டும் நடைபெற்றது.
- சூரிய ஆற்றல், காற்றாலை ஆற்றல், நீர் மின்சாரம் போன்ற ஆற்றல் அக்ஷய் உர்ஜாவின் சில எடுத்துக்காட்டுகள்.

### ஆகஸ்ட் 21–உலக மூத்த குடிமக்கள் தினம்

- உலக மூத்த குடிமக்கள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 21 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.
- உலக மூத்த குடிமக்கள் தினத்தைக் கடைப்பிடிப்பதன் முக்கிய நோக்கம் முதியவர்களின் நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அவர்களுக்கு ஆதரவளிப்பதும் ஆகும்.

SHANMUGAM IAS ACADEMY

- இது முதன்முதலில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் தேதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் அறிவிக்கப்பட்டது.

## பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நினைவு தினம் மற்றும் அஞ்சலி

பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களைக் கௌரவிப்பதற்கும் ஆதரவளிப்பதற்கும் அவர்களின் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை முழுமையாக அனுபவிப்பதை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் ஆகஸ்ட் 21 ஆம் தேதி பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் மற்றும் அஞ்சலி செலுத்தும் சர்வதேச தினமாக பொதுச் சபை நிறுவப்பட்டது.

## உலக தொழில்முனைவோர் தினம்

- ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 21 அன்று உலக தொழில்முனைவோர் தினம் கொண்டாடப்படுகிறது.
- உலக தொழில்முனைவோர் தினத்தின் நோக்கம் உலகம் முழுவதும் தொழில்முனைவு, புதுமை மற்றும் தலைமைத்துவத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.
- WED என்பது நிறுவனர்கள், மேலாளர்கள், தயாரிப்பாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், தொழிலதிபர்கள், கண்டுபிடிப்பாளர்கள், நிர்வாகிகள் மற்றும் வடிவமைப்பாளர்களின் நாள்.
- AIBA, சர்வதேச வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு, WED ஐ விளம்பரப்படுத்த உலகம் முழுவதும் நடக்கும் நிகழ்வுகளை ஒழுங்கமைக்க அனைவரையும் அழைக்கிறது.

# விளையாட்டு

## ஃபிபா மகளிர் உலகக் கோப்பை 2023




- சிட்னியில் நடந்த **2023 ஃபிபா** மகளிர் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை **1-0** என்ற கோல் கணக்கில் வென்று ஸ்பெயின் தனது முதல் மகளிர் உலகக் கோப்பை பட்டத்தை உறுதி செய்தது.
- ஸ்பெயினின், முதல் பெரிய சர்வதேச கோப்பை **2007**ல் ஜெர்மனிக்குப் பிறகு பெண்கள் உலகக் கோப்பையை வென்ற முதல் ஐரோப்பிய அணியாக அமைந்தது.
- ஸ்பெயின், "ஆண்கள் மற்றும் பெண்கள் உலகக் கோப்பைகள் இரண்டையும் வென்ற இரண்டாவது நாடு" என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- **1974** மற்றும் **1990**ம் ஆண்டுகளில் ஆண்கள் உலகக் கோப்பையையும், **2003** மற்றும் **2007** ஆம் ஆண்டுகளில் பெண்கள் உலகக் கோப்பையையும் வென்ற நாடு ஜெர்மனியாகும்.
- ஸ்பெயினின் வெற்றி, "அணிக்கும், நாட்டிற்கும், பெண்கள் விளையாட்டுக்கும் ஒரு வரலாற்று தருணம்".

SHANMUGAM IAS ACADEMY

**வெற்றியாளர்களின் முழு பட்டியல்**

- ❖ போட்டியின் இளம் வீராங்கனை: சல்மா பரல்லுலோ, ஸ்பெயின் (19 வயது நட்சத்திரம்)
- ❖ கோல்டன் க்ளோவ்: மேரி ஏர்ப்ஸ், இங்கிலாந்து
- ❖ கோல்டன் பூட்: ஹினாடா மியாசாவா, ஜப்பான் (ஒரு போட்டியில் அதிக ஐந்து கோல்களை அடித்ததற்காக கோல்டன் பூட்)
- ❖ சில்வர் பூட்: காடிடியாடோ டியானி, பிரான்ஸ்
- ❖ வெண்கல காலணி: அலெக்ஸாண்ட்ரா பாப், ஜெர்மனி
- ❖ கோல்டன் பந்து: ஐடானா பொன்மதி, ஸ்பெயின்
- ❖ வெள்ளி பந்து: ஜெனிபர் ஹெர்மோசோ, ஸ்பெயின்
- ❖ வெண்கலப் பந்து: அமண்டா இலெஸ்டெட், ஸ்வீடன்

## ஆர் பிரக்ஞானந்தா



- ❖ சர்வதேச செஸ் ஃபெடரேஷன் (FIDE) உலகக் கோப்பையின் அரையிறுதிக்கு விஸ்வநாதன் ஆனந்துக்குப் பிறகு சென்ற, "முதல் இந்தியர் ஆர்.பிரக்ஞானந்தா" ஆவார் .
- ❖ அரையிறுதியில், முன்னாள் உலக சாம்பியனான மேக்னஸ் கார்ல்சன் முதல் ஆட்டத்தில் நிஜாத் அபாசோவையும் தோற்கடித்துள்ளார்.
- ❖ காலிறுதிக்கு முன்னேறிய நான்கு இந்தியர்களில், பிரக்ஞானந்தா மட்டுமே இந்திய வீரராக இருக்கிறார்.

## ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் போட்டி




- ❖ ஆகஸ்ட் 16-20 வரை சீனாவின் டேலியன் நகரில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் தனிநபர் சாம்பியன்ஷிப் போட்டியின் யு –17 பிரிவில் இந்தியாவின் அனாஹத் சிங் தங்கப் பதக்கம் வென்றார்.
- ❖ 15 வயதான அனாஹட் 2023 ஆகஸ்ட் 20 அன்று நடந்த இறுதிப் போட்டியில் 'ஹாங்காங்கின் எனா குவாங்கை' 3–1 என்ற கணக்கில் தோற்கடித்து தங்கப் பதக்கத்தை வென்றார்.
- ❖ அவர் மலேசிய வீராங்கனைகளான 'டோய்ஸ் லீ மற்றும் விட்னி இசபெல் வில்சனை' முறையே காலிறுதி மற்றும் அரையிறுதியில் வீழ்த்தினார்.
- ❖ 2019 ஆம் ஆண்டில் "பிரிட்டிஷ் ஜூனியர் ஓபன் ஸ்குவாஷின்" போது யு –11 பட்டத்தை வென்றபோதும், "டச்சு ஜூனியர் ஓபன் ஸ்குவாஷில்" யு –13 பட்டத்தை வென்றதன் மூலமும் இந்திய வீராங்கனை முக்கியத்துவம் பெற்றார்.
- ❖ இந்த ஆண்டின் தொடக்கத்தில், பிரித்தானிய ஜூனியர் ஓபன் ஸ்குவாஷின் யு –15 பிரிவில், இறுதிப் போட்டியில் எகிப்தின் 'சோஹைலா ஹஸேமை' வீழ்த்தி அனாஹட் வெற்றி பெற்றார்.

## லியோனல் மெஸ்ஸி

- ❖ கடந்த ஆண்டு தனது மூன்றாவது ஃபெடரேஷன் இன்டர்நேஷனல் கால்பந்து சங்கத்தின் (FIFA) உலகக் கோப்பை பட்டத்திற்கு தனது நாட்டை வழிநடத்திய பிறகு, லியோனல்

SHANMUGAM IAS ACADEMY



மெஸ்ஸி மீண்டும் இண்டர் மியாமிக்காக முதல் லீக் கோப்பை பட்டத்தை வெல்ல உதவியுள்ளார்.

- ❖ இதன் மூலம் மெஸ்ஸி அமெரிக்க கால்பந்தில், ஏழு போட்டிகளில் தனது 10 கோலை அடித்தது மட்டுமல்லாமல், அவர் தனது புதிய கிளப்பில் இடம்பெற்ற ஒரு போட்டியில் கூட தோல்வியடையவில்லை.
- ❖ மேலும் இந்த கோலானது, அவரது வாழ்க்கையில் கோப்பை இறுதிப் போட்டியில், மெஸ்ஸி அடித்த 37வது கோலாகும்.

## உலக வில்வித்தை: இந்தியாவுக்கு 2 தங்கம்



- ❖ உலகக் கோப்பை வில்வித்தை நான்காவது கட்டப் போட்டியில் இந்தியா 2 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது.
- ❖ பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்ற ஆட்டங்களில் ஆடவர் காம்பவுண்ட் அணிப்பிரிவில்," அபிஷேக் வர்மா, ஒஜாஸ் டியோடேல், பிரதமேஷ் ஜவ்கர்" அடங்கிய இந்திய அணி' 236–232 என்ற புள்ளிக் கணக்கில் 'கிரிஸ் ஷாப், ஜேம்ஸ் லுட்ஸ், சாயர் 'ஆகியோர் கொண்ட அமெரிக்க அணியை வீழ்த்தி தங்கம் வென்றது.
- ❖ மகளிர் காம்பவுண்ட் பிரிவில்,"ஜோதி சுரேகா, அதிதி சுவாமி, பர்னீத் கௌர்" 234–233 என்ற புள்ளிக் கணக்கில் மெக்ஸிகோ அணியை வீழ்த்தி தங்கம் வென்றது. தனிநபர் காம்பவுண்ட் பிரிவில் "ஜோதி" வெண்கலம் வென்றார்.
- ❖ ஆடவர் ரெக்கர்வ் பிரிவில் "தீரஜ் அதானு தாஸ், துஷார் பிரபாகர், மகளிர் பிரிவில் பஜன் கௌர், அங்கிதா பகத், சிம்ரஞ்சித் கௌர் ஆகியோர் வெண்கலம் வென்றனர். மொத்தம் 2 தங்கம் உள்பட 5 பதக்கங்களை கைப்பற்றியது இந்தியா.

## சர்வதேச சர்ஃபிங் ஓபன்: ஜப்பான் சாம்பியன்

- ❖ சர்வதேச சர்ஃபிங் ஓபன் (அலை சறுக்கு) போட்டியில் மகளிர், ஆடவர் என இருபிரிவிலும் "ஜப்பான் சாம்பியன்" பட்டத்தை கைப்பற்றியது.



- ❖ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், உலக சர்ஃபிங் கூட்டமைப்பு, இந்திய சர்ஃபிங் கூட்டமைப்பு சார்பில் மாமல்லபுரம் கடற்கரையில் கடந்த 14–ஆம் தேதி சர்வதேச ஓபன் போட்டி தொடங்கியது.
- ❖ இந்நிலையில் போட்டி நிறைவடைந்த நிலையில், மகளிர் பிரிவில் ஜப்பானின் "சாரா வகிட்டா" 13.50 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.
- ❖ ஆடவர் பிரிவில் இறுதிச் சுற்றில் ஜப்பான் வீரர்," டென்ஷி இவாமி"16.30 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டத்தைக்கைப் பற்றினார்.
- ❖ ஆசிய சர்ஃபிங் போட்டிக்கு இந்தியாவைச் சேர்ந்த 6 வீரர்கள், 1வீராங்கனை கூட்டமைப்பு செலவில் அனுப்பி வைக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டது.

SHANMUGAM IAS ACADEMY

# திட்டங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு

## "பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா (PMJDY)"

- ஜன்தன் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 50 கோடியைத் தாண்டியது.
- மொத்தமுள்ள 50 கோடி கணக்குகளில், 56 சதவீத கணக்குகள் பெண்களுடையது, 67 சதவீத கணக்குகள் கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புறங்களில் தொடங்கப்பட்டுள்ளன.
- இந்தக் கணக்குகளில் உள்ள மொத்த வைப்புத் தொகை ரூ.2.03 லட்சம் கோடிக்கு மேல்.
- இந்தக் கணக்குகளுடன் சுமார் 34 கோடி ரூபே கார்டுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

**பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா**
- இது ஆகஸ்ட் 28, 2014 அன்று தொடங்கப்பட்டது.
- "மக்களுக்கு வங்கி வசதிகளை வழங்குவதற்காக" இது தொடங்கப்பட்டது.

## வெங்காய ஏற்றுமக்கு வரி



- ஒரு கிலோ தக்காளி விலை ரூ.200–ஐ கடந்தது. இப்போது தக்காளி விலை குறைந்துவிட்ட நிலையில், வெங்காயத்தின் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
- "வெங்காய ஏற்றுமதி மீது 40 சதவீத வரியை மத்திய அரசு விதித்துள்ளது".
- உள்நாட்டுச் சந்தையில் வெங்காய விலை உயர்வைத் தடுக்கவும், விநியோகத்தை மேம்படுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- வெங்காயம் மீது ஏற்றுமதி வரி விதிக்கப்படுவது "இதுவே முதல் முறையாகும்".

# அறிவியல் & தொழில்நுட்பம்

## ரஷ்யாவின் முதல் லூனா–25



- ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்குப் பிறகு ரஷ்யாவின் முதல் சந்திர லேண்டரான லூனா –25 நேற்று சுற்றுப்பாதையில் நுழைவதாக இருந்தது, ஆனால் ஒரு அது சில கோளாறுகளால் தோல்வியடைந்ததாக, "ரஷ்ய விண்வெளி நிறுவனம் ரோஸ்கோஸ்மோஸ்" ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- இதற்கிடையில், இந்தியாவின் நிலவு பணி சந்திரயான் –3 வெற்றிகரமாக "லேண்டர் மாட்யூலின்" (LM) சுற்றுப்பாதையை குறைத்து, அதை மேலும் நிலவுக்கு நெருக்கமாக கொண்டு வந்துள்ளது.
- ஆகஸ்ட் 23 ஆம் தேதி நிலவின் தென் துருவத்திற்கு அருகே "லேண்டர் மாட்யூலின்" (LM) தரையிறங்க உள்ளது.



SHANMUGAM IAS ACADEMY

## ஸ்விங் ரிவால்வர் 'பிரபால்'



மேம்பட்ட ஆயுதங்கள் மற்றும் கருவிகள் இந்தியா லிமிடெட் (AW&EIL) தயாரித்த "மற்ற ரிவால்வர்களை விட இரு மடங்கு" திறன் கொண்ட இந்தியாவின் முதல் நீண்ட தூர பக்க ஸ்விங் ரிவால்வர் 'பிரபால்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**அம்சங்கள்**

- பிரபால் ரிவால்வர், ஒரு இலகுரக '32 காலிபர் சைட் ஸ்விங்காகும்' இதன் எடை: 675 கிராம் (காட்ரிட்ஜ்கள் இல்லாமல்).
- துல்லியம்: மற்ற சிவிலியன் கைத்துப்பாக்கிகளின் வரம்பை விட 50 மீட்டர் வரையிலான இலக்குகளைத் தாக்க முடியும்.

**மேம்பட்ட ஆயுதங்கள் மற்றும் கருவிகள் இந்தியா லிமிடெட்** (AW&EIL)

- இது அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனமாகும் (DPSU).
- இந்தியாவின். இது 14 ஆகஸ்ட் 2021 அன்று நிறுவனங்கள் சட்டம் 2013 இன் கீழ் இணைக்கப்பட்டது.
- தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் – ராஜேஷ் சவுத்ரி
- தலைமையகம்– ஆயுதத் தொழிற்சாலை கான்பூர், உத்தரப் பிரதேசம்

# வங்கி & நிதி

## யெஸ் வங்கியின் ('YES BANK') மொபைல் செயலி

- யெஸ் பேங்க் லிமிடெட் (லிமிடெட்), ஒரு அதிநவீன மொபைல் பேங்கிங் செயலியான 'ஐரிஸ் பை யெஸ் பேங்க்'யை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது வங்கியின் முதல் நேரடி நுகர்வோர் தளமாகும், இது புதிய மற்றும் ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்கள் 100 க்கும் மேற்பட்ட அம்சங்கள் மற்றும் சேவைகளை அணுக அனுமதிக்கிறது.

**முக்கிய அம்சங்கள்**

இது சேமிப்பு கணக்கு திறக்க, கடன் அட்டைக்கு விண்ணப்பிக்க, உடனடி தனிநபர், வணிக மற்றும் வாகனக் கடன்களைப் பெற, தொடர் மற்றும் நிலையான வைப்புகளை முன்பதிவு செய்ய உதவி புரியும்.

## இந்தியன் வங்கியின் – இணைய தள பாதுகாப்பு பெட்டகம்

- டிஜிட்டல் டாக்குமென்ட் எக்ஸிகியூஷன் (DDE) பிளாட்ஃபார்ம் மூலம் ஆன்லைன் லாக்கர் ஒப்பந்தத்தை செயல்படுத்தும் முதல் பொதுத்துறை வங்கி (PSB) என்ற பெருமையை "இந்தியன் வங்கி" பெற்றுள்ளது.

SHANMUGAM IAS ACADEMY



- இந்தியன் வங்கியின் "டிஜிட்டல் டாக்குமென்ட் எக்ஸிகியூஷன்" (DDE) என்பது காகிதமில்லா இ–முத்திரை மற்றும் மின்னணு கையொப்ப (இ–கையொப்பம்) வசதியுடன் கூடிய முழு தானியங்கி, மற்றும் ஒப்பந்த நிறைவேற்று தளமாகும்.
- இந்த அம்சம் "கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்கள் எளிதாக லாக்கர் ஒப்பந்தங்களைச் செயல்படுத்த உதவுகிறது".
- இது வாடிக்கையாளர்கள் பரிவர்த்தனை நிலையைக் கண்காணித்து, எலக்ட்ரானிக் எவிடன்ஸ் (65பி) சான்றிதழையும் உடனடியாகப் பதிவிறக்க உதவும்.
- 65B சான்றிதழ் என்பது சில வழக்குகளில் மின்னணு அல்லது டிஜிட்டல் சான்றுகளை தயாரிப்பதற்காக "இந்தியாவில் உள்ள நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழாகும்.

**இந்தியன் வங்கி**

- முதன்மைச் செயல் அலுவலர்,நிர்வாக இயக்குநர்– சாந்தி லால் ஜெயின்
- தலைமையகம் – சென்னை, தமிழ்நாடு
- நிறுவப்பட்ட ஆண்டு – 1907
- டேஃக்லைன் – உங்கள் சொந்த வங்கி

## தமிழக செய்திகள்

### புத்தொழில் (ஸ்டார்ட்அப்) திருவிழா

- கோவை கொடிசியா வளாகத்தில் தமிழ்நாடு புத்தொழில், புத்தாக்க இயக்கம் சார்பில் 2 நாள்கள் நடைபெறும் புத்தொழில் (ஸ்டார்ட்அப்) திருவிழா சனிக்கி ழமை தொடங்கியது.
- இந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் பங்கேற்றுப் பேசினார்
- தமிழ்நாட்டில் 2021, மார்ச் நிலவரப்படி சுமார் 2,300 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தன.
- ஆனால், 2 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 3 மடங்காகி, இப்போது 6,800–க்கும் மேல் உயர்ந்துள்ளது.
- புத்தொழில் முனைவோருக்கு வழிகாட்டுதல் வழங்குவதற்காக மென்டார் டி .என். என்ற வழிகாட்டி மென்பொருள் தளம் தொடங்கஉள்ளது
- முதலீட்டாளர்களையும் புத்தெழில் முனைவோரையும் இணைக்க முதலீட்டாளர் இணைப்பு தளம் தொடங்கப்பட்டுள்ளது
- துணிகர முதலீடுகளை ஈர்ப்பதில் கடந்த ஜூலை மாதத் தரவுகளின் அடிப்படையில் இந்திய நகரங்க ளிலேயே சென்னை முதலிடத்தில் உள்ளது.
- மந்தமான முதலீட்டுச் சூழலிலும் சென்னை சார்ந்த நிறு வனங்கள் மீது முதலீட்டாளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை இது காட்டுகிறது.
- புத்தொழில்முனைவோருக்கு உலகளாவிய முதலீடு, சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் நோக்கில், உலக வர்த்தக மைய மாக மாறி வரும் துபையில் ஒருங் கிணைப்பு மையம் ஒன்று அமைக் கப்பட உள்ளது.
- மத்திய அரசின் ஸ்டார்ட் அப் இந்தியா அமைப்பு வழங்கும் 'லீடர்' அங்கீகாரம் தமிழ்நாட்டுக் குக்கிடைத்திருக்கிறது.

- தமிழகத்தில் முதல்முறையாக நடைபெறும் இந்த ஸ்டார்ட் அப் திருவிழாவில் 450–க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்று தங்களின் கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்தியுள்ளன.

## தமிழக கடற்பரப்பில் 7,000 மெகா வாட் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு

- தமிழக கடற்பரப்பில் காற்றாலை மின் நிலையம் அமைக்க ஒப்பந்தப் புள்ளி கோர மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை முடிவு செய்துள்ளது.
- மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை சார்பில், வெளிநாடுகளில் உள்ளதைப்போல நிலத்தில் மட்டுமின்றி, தமிழகம், குஜராத் மாநிலங் களின் எல்லைக்குள்பட்ட கடல்பரப்பில், இதற்கான சாத்தியக்கூறு கள் இருப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளது.
- இந்த நிலையில், தற்போது, தூத்துக்குடி, ராமநாதபுரம் உள்ளிட்ட தென் மாவட்டங்களில், மன்னார் வளைகுடா கடற்பரப்பில் காற்றாலை அமைக்க புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை முடிவு செய்துள்ளது. இதற்காக தனியார் நிறுவனங்களுக்கு கடற்பரப்பை குத்தகைக்கு விட, ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டுள்ளது.
- இது குறித்து காற்றாலை மின் உற்பத்தியாளர்கள் கூறியது: நிகழாண்டில் 4,000 மெகா வாட்மற்றும் 2024–25–இல் 3,000 மெகா வாட் திறன் மின் உற்பத்தி செய்யும் காற்றாலை மின் நிலையம் அமைப் பதற்காக, கடற்பரப்பு குத்தகைக்கு விடப்படவுள்ளது.

- இதற்கு கடற்பரப்பில் சதுர கிலோ மீட்டர் அளவில் விலை நிர் ணயம் செய்யப்படும். இதை ஒப்பந் தம் எடுக்கும் நிறுவனம், கடற்பரப் பில் எந்த இடத்தில் காற்று அதிகம் வீசுகிறது,
- எவ்வளவு வேகத்தில்வீசு கிறது,எந்ததிசையில் வீசுகிறதுஎன் பன உள்ளிட்டவை தொடர்பாக இரு ஆண்டுகள் ஆய்வு செய்து, அதில் கிடைக்கும் முடிவுகளின் அடிப்படையில், காற்றாலை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கும்.
- தமிழக கடல் எல்லைக்குள்பட்ட கடற்பரப்பில் அமைக்கப்படும் காற்றாலையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தமிழத்துக்கே ஒரு யூனிட் ரூ.4–க்கு வழங்க வேண்டுமென மத்திய அரசுக்கு ஏற்கெனவே மின்வா ரியம் சார்பில் கோரிக்கை வைக்கப் பட்டுள்ளது என்றனர்

# தேசிய செய்திகள்

## ஆரஞ்சு நிறத்தில் வந்தே பாரத்: வெற்றிகரமாக சோதனை ஓட்டம்

- ஆரஞ்சு மற்றும் சாம்பல் நிறத்துக்கு மாற்றப்பட்ட வந்தே பாரத் ரயில் சோதனை ஓட்டம் சனிக்கிழமை வெற்றிகரமாக நடைபெற்றது.
- 'இந்த வந்தே பாரத் ரயில் பெட்டிகள் அனைத்தும் சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த ரயில் பெட்டி தொழிற் சாலை (ஐசிஎப்) தான் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
- இந்நிலையில் வெள்ளை மற்றும் நீல நிறங்களில் இயக்கப்பட்டு வந்தே பாரத் ரயில் ஆரஞ்சு மற்றும் சாம்பல் நிறத்துக்கு மாற்றப்படுவதாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அண்மையில் அறிவித்திருந்தார்.
- இனி ஐசிஎப்–இல் தயாரிக்கப்படும் அனைத்து வந்தே பாரத் ரயில்களும் ஆரஞ்சு, சாம்பல் நிறத்தில் தான் தயாரிக் கப்படும் எனவும் அவர் கூறியிருந்தார்.
- இந்நிலையில், ஆரஞ்சு –சாம்பல் நிறத்தில் தயாரிக்கபட்ட புதிய வந்தே பாரத்ரயில் ஐசிஃஎப்–பில் அருகில் உள்ள ரயில் தடத்தில் சோதனை ஓட்டம் சனிக்கிழமை வெற்றிகரமாக முடிவடைந்து தயார் நிலையில் உள்ளது.

- இந்த புதிய நிற வந்தே பாரத் ரயில் எழும்பூர்–திருநெல்வேலி வழித்தடத்தில் இயக்கப்பட வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

- 'வந்தேபாரத்ரயில்' சேவையை முதலில் தில்லி–வாரணாசி இடையே த்தில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.
- வெள்ளை மற்றும் நீல நிறத்தில் இந்த ரயில் இயக்கப்படுகிறது. நாடு முழுவதும் 25 வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.
- தமிழகத்தில் சென்னை–மைசூரு, சென்னை–கோவை இடையே இந்த ரயில் இயக்கப்படுகிறது.
- மேலும் சென்னை எழும்பூர் – திருநெல்வேலி, சென்னை – திருப்பதி ரயில் சேவை அறிவிப்புகள் விரைவில் வெளியி டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் இந்தியாவின் வெற்றித் தீர்வுகள் பொருந்தும்



- பிரதமர் நரேந்திர மோடிஇந்தியாவில் வெற்றி பெறும் தீர்வுகள் உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் பொருந்தும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- பெங்களூரில் சனிக்கிழமை நடைபெற்ற ஜி20 எண்ம பொருளாதார பணிக்குழு அமைச்சர்கள் சந்திப்புக் கூட்டத்தில் காணொலி வாயிலாக பேசினார்
- இந்தியா தனது அனுபவங் களை உலகத்தோடு பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளது.
- உலக அளவிலான இணையவழி பொது எண்மப் பொருள் களஞ்சியத்தை இந்தியா தற்போது உரு வாக்கியுள்ளது. இது யாரும் பின் தங்கிவிடக் கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்திய அடுக்கு ஆகும்.
- இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டுள்ள பங்கேற்பாளர்கள், நாடுகளுக்கு இடையிலான எண்மத் திறன்களைக் கண்டறியும் வழித்தடத்தை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.
- மேலும், எண்மத் திறன் மேம்பாட்டுக்காக இணையவழி சீர் மிகு மையத்தை அமைக்கவும் முயற்சிக்கவேண்டும்.
- உலக அளவில் பரவும் வாய்ப்புள்ளதால், எண்மப் பொருளாதா ரம் எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல், சவால்களுக்கு எதிராக ஜி20 நாடுகளின் பிரதிநிதிகள் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.
- பாதுகாப்பான, நம்பகமான, மீள்தன்மையுடைய எண்மப்பொருளாதாரத்துக்கான ஜி20 உயர்நிலைக் கொள்கைகள் தொடர்பாக ஒருமித்த கருத்தைக் கட்டமைக்க வேண்டும்.
- அனைவரையும் உள்ளடக்கிய, வளமான மற்றும் பாதுகாப்பான உலக எண்ம எதிர்காலத்துக்கான அடித்தளத்தை அமைக்கும் தனித் தன்மை வாய்ந்த வாய்ப்பு ஜி20 நா டுகளுக்கு உள்ளது.
- எண்ம பொது உள்கட்டமைப்பு மூலம் உள்ளடக்கிய நிதி மற்றும் உற்பத்தித் திறனை ஒன்றிணைக்க முடியும்.
- மக்கள் நிதி வங்கிக் கணக்குகள், ஆதார் அடையாள எண்கள், கைப்பேசி எண்களை ஒரே புள்ளியில் இணைத்து, நிதி பரி வர்த்தனையில் இந்தியா புரட்சி செய்துள்ளது.

SHANMUGAM IAS ACADEMY

- செயற்கை நுண் ணறிவால் செறிவூட்டப்பட்ட 'பாஷினி' என்ற மொழிபெயர்ப் புத் தளத்தை இந்தியா உருவாக்கி வருகிறது. இது, இந்தியாவில் உள்ள பல்வகைப்பட்ட மொழிக ளில் உள்ளடக்கிய எண்மத் தீர்வுகளை வழங்கும் என்றார்.

SHANMUGAM IAS ACADEMY